## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 38/2017**
திரு.தயாநிதி (D.W –7) **13.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. இந்த தாவா என்னுடைய மாமா ரத்தினசாமி தாவா சொத்துக்களை பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. தாவா விவரங்களை படித்துப் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்துக்களை பாகம் பிரித்துக் கொள்ளலாம் என்று பிரித்துக் கொள்ளலாம் என்று 05.08.2016 ம் தேதி சட்ட அறிவிப்பு அனுப்பி உள்ளார் என்றால் சரி. ஆனால் எங்களுக்கு அது கிடைக்கப் பெறவில்லை. தாவாவில் என்னுடைய தாயார் சுமதி ஐந்தாம் பிரதிவாதியாக உள்ளார் என்றால் ஆமாம். சட்ட அறிவிப்பை என்னுடைய தாயார் ஐந்தாம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையை வாதி தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி.

2. வாதி தனிப்பட்ட முறையில் ராஜேஸ்வரி ப்ளீச்சிங் என்ற நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் இல்லை. முதலில் என்னுடைய தாத்தா பிரின்ஸ் டையிங் என்ற நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரி. ராஜேஸ்வரி ப்ளீச்சிங்கில் உள்ள கட்டமைப்புகளை என்னுடைய மாமா வாதி என்னுடைய தாத்தா நடத்தி வந்த பிரின்ஸ் டையிங் கொடுத்து பங்குதாரராக இருந்து பிரின்ஸ் டையிங் நடந்து வந்தது என்றால் தவறு.

3. 01.04.2004 ஆம் வருடம் பிரின்ஸ் டையிங் நிறுவனம் கலைக்கப்பட்டதாக சொல்வதே பொய் என்றால் தவறு. ஆடிட்டர் சொல்லி அது கலைக்கப்பட்டது. பி.வா.சா.ஆ–16 அதற்கான ஒளி நகல் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ–14 ஆவண விபரங்கள் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரி. அந்த விவரங்கள் என்னுடைய

பாட்டி சரஸ்வதி என்னிடம் சொல்லி உள்ளார். 01.04.2004 ல் பிரின்ஸ் டையிங் நிறுவனம் கலைக்கப்படவில்லை என்னுடைய தாத்தா ராமசாமி உயிருடன் இருந்த வரை அந்த நிறுவனம் நடைமுறையில் இருந்து நடந்து வந்தது என்றால் தவறு. என்னுடைய தாத்தா இறந்த பிறகும் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தை வாதி இரத்தினசாமி தொடர்ந்து நடத்தி வந்தார் என்றால் தவறு.

4. பி.வா.சா.ஆ– 14 முதல் முத்திரைத்தாள் 8.9 1999 ல் வாங்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரி. இரண்டாவது முத்திரைத்தாள் 06.10.2003 தேதி வாங்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ–14 இல் உள்ள கையொப்பங்கள் வாதி இரத்தினசாமி மற்றும் என்னுடைய தாத்தா ராமசாமி உடையது இல்லை என்றால் தவறு. பி.வா.சா.ஆ– 14 ஆவணம் வழக்கிற்கு பிறகு நானும் என்னுடைய தாயாரும் தயார் செய்து உள்ளோம் என்றால் தவறு. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 100/ 2017 ல் இந்த ஆவணத்தின் விவரங்கள் வாதொரைக்கப்படவில்லை என்றால் தவறு சொல்லி உள்ளேன். அந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் பி.வா.சா.ஆ–16 தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு தாக்கல் செய்தேன். தவறாக சாட்சியும் அளிக்கிறேன் பி.வா.சா.ஆ– 16 ஆவணம் வழக்கிற்கு பிறகு தற்சமயம் முதல் விசாரணை வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு.

5. என்னுடைய தாத்தா ராமசாமி அவருடைய மனைவி சரஸ்வதிக்கு ஏற்படுத்தி உள்ளதாக சொல்லும் தான செட்டில்மெண்ட் ஆவணம் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி, சொல்லி தெரியும். தான செட்டில்மெண்ட் ஆவணம் எந்த சூழ்நிலையில் உருவாக்கப்பட்டது என்ற விவரங்களை ஆவணத்தின் சாட்சிகள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் ஆமாம். செட்டில்மெண்ட் ஆவணம் உருவானதை பொறுத்து தெய்வ சிகாமணி தனக்குத் தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் ஆமாம். ஆனால் அவர் தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரி. சாட்சி தன்னிச்சையாக முன்வந்து தெய்வசிகாமணி, ராமசாமியின்

நெருங்கிய நண்பர் என்று கூறுகிறார். தெய்வசிகாமணியை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

6. தெய்வசிகாமணி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது குறுக்கு விசாரணையில் எண்ணெய் தெரியாது என்று சொல்லி உள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தெய்வசிகாமணியை எனக்கு எப்படி தெரியும் என்றால் என்னுடைய தாத்தா அவரை அறிமுகப்படுத்தியுள்ளார். எப்படி அறிமுகப்படுத்தினார் என்றால் என்னுடைய தாத்தா ராமசாமியின் தொழிலுக்கு அவர் உதவியாக இருந்ததாக சொல்லி அறிமுகப்படுத்தியுள்ளார். தெய்வசிகாமணி அவருடைய சாட்சியத்தில் என்னுடைய தாத்தா ராமசாமியிடம் பழைய கேன்களை வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளாரா என்றால் ஆமாம்.

7. தெய்வசிகாமணிக்கு தாவா சொத்தில் உள்ள கட்டடங்களை வாடகைக்கு விடுவதற்காக நான் வாடகை ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்த முயற்சிதேனா என்றால் இல்லை. அது சம்பந்தமாக 15.05.2019 வாதி ரத்தினசாமி எனக்கும் தெய்வசிகமணிக்கும் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் தெரியாது. பொய் சாட்சியம் அளிக்கிறேன் அந்த சட்ட அறிவிப்புக்கு நானும் தெய்வசிகாமணியும் சேர்ந்து 21.05.2019 ஆம் தேதி பதில் அறிவிப்பு வழக்கறிஞர் மூலம் அனுப்பி உள்ளோம் என்றால் சரி. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அந்த பதில் அறிவிப்பு என்றால் சரி. அது **வா.சா.ஆ– 37**. அதன் பிறகு நானும் தெய்வ சிகாமணியும் ரத்தினசாமிக்கு எதிராக நீதிமன்றத்தில் முன் எச்சரிக்கை மனு தாக்கல் செய்தோம் என்றால் ஞாபகம் இல்லை.

8. என்னுடைய தாத்தா அவருடைய மனைவி சரஸ்வதி பெயரில் 21.07.2011 ஆம் தேதி அவருடைய சொத்துக்களை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியதாக சொல்வதே பொய் என்றால் தவறு. உண்மையான ஆவணம். அந்த சமயத்தில் என்னுடைய தாத்தா ராமசாமி உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் தவறு. வாதியின் மற்றொரு சகோதரர் கோவிந்தராஜ் திருமணம் ஆன பிறகு தனியாக இருந்து வந்தார் என்றால் சரி. கோவிந்தராஜ்

அவருடைய பெற்றோர் மற்றும் இந்த வழக்கு வாதியுடன் மனவிரோதம் ஏற்பட்டு தனிக்குடித்தனம் சென்றார் என்றால் அது பற்றி தெரியாது.

9. என்னுடைய தாத்தாவின் சொத்துக்களில் கோவிந்தராஜ் பாகம் கேட்டு வரலாம் என்ற எண்ணத்தில் என்னுடைய தாத்தா கடைசி காலத்தில் படுத்த படுக்கையாக இருந்த போது என்னுடைய பாட்டி சரஸ்வதி என்னுடைய தாயார் மற்றும் அவருடைய சகோதரி மற்றும் முத்துக்குமார் ஆகியோர் சேர்ந்து தான செட்டில்மெண்ட் ஆவணத்தை பெயர் அளவில் உருவாக்கி உள்ளார்கள் என்றால் தவறு. தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ராமசாமி ஏற்படுத்தவில்லை அதில் எழுதப்பட்டுள்ள சங்கதிகள் அவருக்கு தெரியாது என்றால் தவறு. அவருக்கு நன்றாக தெரியும். அவருக்கு எழுத படிக்க தெரியும். தவறாக சாட்சியும் அளிக்கிறேன் என்னுடைய தாத்தாவிற்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் அவர் நினைவில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல.

10. டைனிங் பேக்டரியில் பெரிய குடோன் இருந்தது என்றால் தவறு. அந்த சொத்தில் 20,000 சதுரடியில் ஓட்டு குடோன் இருந்தது என்றால் தவறு. காயப்போடும் பந்தல் இருந்தது. தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையாளர் நேரில் பார்வையிட்டார் என்றால் சரி. நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்த அறிக்கையை படித்துப் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அதில் நீதிமன்ற ஆணையாளர் 20,000 சதுடியில் குடோன் இருப்பதாக சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் ஆவணம் ராமசாமி ஏற்படுத்தாததால் தான் அந்த ஆவணத்தில் 20 ஆயிரம் சதுர அடியில் குடோன் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் பெறப்படும் தண்ணீர் விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதற்கு தனியாக ஆவணம் உள்ளது. தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

11. தான செட்டில்மெண்ட் ஆவணத்தை என்னுடைய தாயார் அவருடைய சகோதரி பாட்டி ஆகியோர் உருவாக்கியதால்தான் பிரின்ஸ் டையிங்கில் ரத்தினசாமி நடத்தி வந்ததால் தான் குறிப்பிடவில்லை என்றால் தவறு. என்னுடைய தாத்தா

மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் தண்ணீர் எடுத்துக் கொள்ளும் உரிமையை கொடுத்து பதிவு ஏற்பட்ட ஆவணம் ஏற்படுத்தி உள்ளாரா என்றால் இல்லை. வர்தமான கடிதம் எழுதிக் கொடுத்துள்ளார் எனக்கு எழுதிக் கொடுத்து உள்ளாரா என்றால் இல்லை. என்னுடைய பாட்டிக்கு எழுதிக் கொடுத்து என் பாட்டி எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார். வர்தமான கடிதம் பொய் மாதிரி கடிதம் ராமசாமி ஏற்படுத்தவில்லை என்றால் தவறு. உண்மையிலேயே வர்தமான கடிதம் ஏற்பட்டு இருந்தால் அந்த கடிதத்தை என்னுடைய பாட்டி சரஸ்வதி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் ஒப்படைத்து இருப்பார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

12. தான செட்டில்மெண்ட் ஆவணம் நல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. தாவா சொத்தை பொறுத்து என்னுடைய தாத்தா ராமசாமி தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தவில்லை. அந்த ஆவணம் உருவாக்கப்பட்டது என்பதால் தாவா சொத்தில் ராமசாமியின் வாரிசுகள் அனைவருக்கும் சரி பாகம் பாத்தியம் என்றால் தவறு. தாவா சொத்துக்களை பாகம் கேட்டு வாதி சட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு என்னுடைய பாட்டியும் என்னுடைய அம்மாவும், அப்பாவும் சேர்ந்து என் பெயருக்கு 22.11.2016 ஆம் தேதி ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் என்றால் தவறு.

13. என் பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி. என் பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் உருவாக்கப்பட்டதால் தான் நல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு ஏற்படாமல் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா நிலுவையில் உள்ள போது என்னுடைய தகப்பனார் பெயரில் தாவா சொத்தை பொறுத்து ஆவணம் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரி.

14. அந்த ஆவணமும் யாருக்கும் பாகம் சென்று விடக்கூடாது என்பதற்காக ஏற்படுத்தி உள்ளீர்கள் என்றால் தவறு. என்னுடைய பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் குடோன் விவரங்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால்

சொல்லப்பட்டுள்ளது. ராமசாமி அவருடைய மனைவி சரஸ்வதி பெயரில் ஏற்பட்டுள்ளதாக சொல்லும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்படாத சங்கதிகள் என் பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. என்னுடைய பாட்டி சரஸ்வதி என் பெயருக்கு ஒரு வர்தமான ஆவணம் எழுதிக் கொடுத்ததாக சொல்வதே பொய் என்றால் தவறு. என் பெயரில் ஏற்பட்டதாக சொல்லும் வருத்தமான கடிதத்தையும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் தவறு.

15. மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் ராமசாமியின் வாரிசுகள் அபராத தொகை செலுத்த வேண்டும் என்று அனைவருக்கும் அறிவிப்பு வந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த அறிவிப்பிற்கு என்னுடைய பாட்டி, தாயார் தாவா சொத்துக்களில் அனுப்பிய பதில் அறிவிப்பில் ஐந்தில் ஒரு பாகம் அவர்களுக்கு உள்ளதாக சொல்லி உள்ளார்கள் என்றால் தவறு. மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவிப்பின் மூலம் செலுத்த வேண்டிய அபராத தொகையை இன்னும் செலுத்தவில்லை என்றால் சரி. தாவா சொத்துக்களை பொறுத்து என்னுடைய தாத்தா பாட்டி பெயரில் தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியதாக சொல்லும் சமயத்தில் தாவா சொத்திற்கு உரிய உரிமை ஆவணங்கள் அனைத்தும் கார்ப்பரேஷன் வங்கியில் அடமானத்திற்காக கொடுக்கப்பட்டிருந்தது என்றால் ஞாபகம் இல்லை.

16. கார்ப்பரேஷன் வங்கியில் பெற்ற கடன் செலுத்தப்படவில்லை என்று வங்கியால் முடிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். கடன் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்துமாறு கார்ப்பரேஷன் வங்கியில் இருந்து ராமசாமியின் வாரிசுதாரர்கள் அனைவருக்கும் வங்கி அறிவிப்பு அனுப்பியது என்றால் ஆமாம். அந்த கடனை இரத்தினசாமி தான் முழுமையாக திருப்பி செலுத்தினார் என்றால் தவறு. சரஸ்வதி தான் முழுமையாக செலுத்தினார் என்று சாட்சி தனிச்சையாக முன்வந்து கூறுகிறார். தாவா சொத்துக்களை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம்

உருவாக்கப்பட்டதால் தான் கடன் திருப்பி செலுத்த வேண்டி அனைவருக்கும் சட்ட அறிவுப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் தவறு.

17. முதல் விசாரணை வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ– 11 முதல் பி.வா.சா.ஆ–48 வரை உள்ள ஆவணங்கள் அனைத்தும் தாவாவிற்கு பிறகு ஏற்பட்டவை என்றால் சரி. செல்லாத தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வரி ரசீதுகள் மாற்றம் செய்யப்பட்டு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. அந்த ஆவணங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்றால் தவறு. ரத்தினசாமி தாவா சொத்துக்கள் எனக்கு உரிமை இல்லை என்று வழக்கு நடத்தி வருகிறார் என்றால் சரி. சொத்தில் முழு உரிமை எனக்கு உள்ளது. தாவா சொத்து முழுவதும் எனக்கு உரிமை உள்ளது என்னுடைய வழக்கில் பரிகாரம் கோரவில்லை என்றால் தவறு கோரியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள 100/2017 வழக்கில் தாவா சொத்துக்களில் எனக்கு உரிமை இல்லை என்பதால் தான் விளும்புகை பரிகாரம் கோரப்படவில்லை என்றால் தவறு.

18. தாவா சொத்தில் வாதிக்கு ராமசாமியின் வாரிசு என்ற அடிப்படையில் பாகமும் மற்ற வாரிசுதாரர்களுக்கு பாகமும் உண்டு என்றால் தவறு. தாவா சொத்தில் உள்ள பிரின்ஸ் டையிங் பங்குதாரர் என்ற முறையிலும் ராமசாமியின் வாரிசுதாரர் என்ற முறையில் மாசுக்கட்டுப்பாட்ட வாரிய தண்ணீர் உரிமையில் வாதி இரத்தினசாமிக்கு 60 சதவீத பங்கு உண்டு என்றால் தவறு. தாவா சொத்தில் எனக்கு உரிமையோ பாத்தியமோ, சுவாதீனமோ இல்லை என்பதால் வாதி தாக்கல் செய்துள்ள 38/2017 தீர்ப்பாக வேண்டும், நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 100/2017 தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d.கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.